# தமிழ்த்துறை

## நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,களியக்காவிளை

## திராவிடப் பல்கலைக்கழக தமிழ்த்துறை (ஆந்திரா)

இணைந்து ஒருங்கிணைக்கும்

# தமிழ்ப் படைப்பிலக்கிய புனைவு வெளிகள்

## தேசியக் கருத்தரங்கம் ( 15.02.2020, சனிக்கிழமை )

## சான்றிதழ்

நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற தேசியக்கருத்தரங்கில் ..முனைவர்..தே..மெர்லின்..மினி... கலந்து கொண்டு...மணிமேகலை..தெய்வம்........................ என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார் என்று சான்றளிக்கப்படுகிறது.

பேரா.முனைவர்.ம.பெரில் திரேஸ்
பேரா.முனைவர்.ந.ஷீமா மோள்
ஒருங்கிணைப்பாளர்கள்

பேரா.முனைவர்.எஸ. தங்கம் பிறின்ஸ்
தமிழ்த்துறை தலைவர்

பேரா.முனைவர். எ. மீனாட்சி சுந்தரராஜன்
கல்லூரி முதல்வர்

அருட்தந்தை . எம்.எக்காமென்ஸ் மைக்கேல்
கல்லூரிச் செயலர்

# தமிழ்த்துறை

**நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

களியக்காவிளை

**திராவிடப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை (ஆந்திரா)**

இணைந்து ஒருங்கிணைக்கும்

# தமிழ்ப் படைப்பிலக்கிய புனைவு வெளிகள்

## தேசியக் கருத்தரங்கம்










பதிப்பாசிரியர்கள்

பேரா. முனைவர். த. விஷ்ணு குமாரன்

முனைவர். எஸ். தங்கம் பிறின்ஸ்

முனைவர். ம. பெரில் திரேஸ்

முனைவர். ந. ஷீமா மோள்

15.02.2020

# தமிழ்ப்படைப்பிலக்கியப் புனைவு வெளிகள்

**பதிப்பாசிரியர்கள்**

**பேராசிரியர். முனைவர் த. விஷ்ணு குமாரன்**
தமிழ்த்துறைத் தலைவர்,
திராவிடப் பல்கலைக் கழகம், ஆந்திரா.

**முனைவர். எஸ். தங்கம் பிறின்ஸ்**
தமிழ்த்துறைத் தலைவர்,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

**முனைவர். ம. பெரில் திரேஸ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

**முனைவர். ந. ஷீமா மோள்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

**தமிழ்த்துறை**
**நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**களியக்காவிளை**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழ்ப் படைப்பிலக்கியப் புனைவு வெளிகள் |
| நூல்வகை | : | ஆய்வுக்கட்டுரைகள் தொகுப்பு |
| பதிப்பாசிரியர்கள் | : | **பேராசிரியர். முனைவர் த. விஷ்ணு குமாரன்**<br>தமிழ்த்துறைத் தலைவர்,<br>திராவிடப் பல்கலைக் கழகம், ஆந்திரா.<br>**முனைவர். எஸ். தங்கம் பிறின்ஸ்**<br>தமிழ்த்துறைத் தலைவர்,<br>நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லு<br>களியக்காவிளை.<br>**முனைவர். ம. பெரில் திரேஸ்**<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,<br>நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லு<br>களியக்காவிளை.<br>**முனைவர். ந. ஷீமா மோள்**<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,<br>நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லு<br>களியக்காவிளை. |
| முதல் பதிப்பு | : | பிப்ரவரி 2020 |
| மொத்த பக்கங்கள் | : | 376 |
| விலை | : | 350/- |
| உரிமை | : | தமிழ்த்துறை<br>நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லு<br>களியக்காவிளை. |
| வெளியீடு | : | Sai venkateswara publications,<br>14-510-9 Lakshmi layout,<br>Kuppam 517425 Andhra Pradesh |
| அச்சாக்கம் | : | ஆவெ அச்சகம், வெள்ளிகோடு, 9487549262 |
| அட்டை வடிவமைப்பு | : | பேரா. முனைவர். ஆர். அட்லின் ஜெபா |
| ISSN | : | 978-81-926615-7-5 |






# தமிழ்ப் படைப்பிலக்கியப் புனைவு வெளிகள்

## பதிப்பாசிரியர்கள்


**பேராசிரியர். முனைவர் த. விஷ்ணு குமாரன்**
தமிழ்த்துறைத் தலைவர்,
திராவிடப் பல்கலைக் கழகம், ஆந்திரா.

**முனைவர். எஸ். தங்கம் பிறின்ஸ்**
தமிழ்த்துறைத் தலைவர்,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

**முனைவர். ம. பெரில் திரேஸ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

**முனைவர். ந. ஷீமா மோள்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.


## கருத்தரங்க அமைப்புக் குழு


**னைவர். அ. சுஜாதா ஜாய்ஸ்**
தவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
றிவியல் கல்லூரி,
ரியக்காவிளை.

**னைவர். தா. லிற்றில் மேரி**
தவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
றிவியல் கல்லூரி,
யக்காவிளை.

**னைவர். ஆர். அட்லின் ஜெபா**
தவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
றிவியல் கல்லூரி,
யக்காவிளை.

பேராசிரியர். முனைவர். சி. இலட்சுமணன்
தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

முனைவர். சு. சுமா மகேஷ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
களியக்காவிளை.

32. புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் 174
முனைவர். க. அஜி

33. கவிஞர் வெ. நா. திருமூர்த்தி பாடல்கள் வழி பாட்டாளி மக்களின் உரிமைக்குரல் முனைவர் எ. ஜாஸ்மின் விஜி 179

34. மணிமேகலை உணர்த்தும் சமுதாய சிந்தனைகள் 184
கொ. செ. விஜிலா

35. கனிமொழியின் கருவறை வாசனை கவிதைகளில் பெண்ணிய நோக்கு முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட் 191

36. சிறுகதைப் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் 198
முனைவர் கு. பிரபா

37. தமிழ் படைப்புகளில் புனைவு வெளிகள் 203
க.ம. கவிஷா

38. நாச்சியார் அருளிய குயிற்பத்து 208
முனைவர். எஸ். எஸ். ஷீபா

39. மாதவியின் ஆளுமை 214
முனைவர் க. உமாமகேஸ்வரி

40. திருப்பாவை, திருவெம்பாவை ஒப்பீடு 218
முனைவர். க. கிருஷ்ணவேணி

41. சிலும்பில் கணிகையர் 22
முனைவர். ச. இராஜகுமாரி

42. கம்ப இராமாயணத்தில் - இயற்கை வருணனை 23
T. J. ஆஷாடாலின்

43. அகப்புற நூல்களில் தொழில்கள் 23
சு. லி. ஜினி மேபல்

44. கம்பராமாயணப் பதிப்பு நெறிமுறைகள் 24
முனைவர் சி. இலட்சுமணன்

45. கல்யாண வேலி நாவலில் வாழ்வியல் சிந்தனைகள் 25
முனைவர். சுபி .ஹ

46. கோசல நாட்டின் இயற்கை வளம் 25
ஆஷா .ரெ.ப

47. இலக்கியங்களில் புனைவு வெளிகள் 26
செ. ஜடா







8. சமுதாய மொழியியலில் காணப்படும் ஒலியன் மாற்றங்கள் 268
முனைவர் ஆர். அட்லின் ஜெபா

9. கண்ணகியின் அறக்கற்பும் மறக்கற்பும் 272
முனைவர். த. மினி

0. பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனை 276
முனைவர் பட்ட ஆய்வாளர். டயானா .எ

1. கம்பனின் பாத்திரப்படைப்புகளில் சடாயு 283
சு. சுஜிறிஷா

2. பன்முகப் பார்வையில் ஆதவன் தீட்சண்யா கவிதைகள் 289
முனைவர் ம. பெரில் திரேஸ்

3. பழமையான இந்திய இலக்கியங்களுள் அகநானூறு தரும் செய்திகள் , பெ. காளியானந்தம் 294

4. புறநானூறு வழி அறியலாகும் சடங்கு முறைகள் 305
முனைவர். த. அனிதா ஆனிலெட்

5. தடம் மறைந்து வரும் குமரிமாவட்ட நெய்தல் நில விளையாட்டுகளும் பண்பாட்டுச் சிதைவுகளும் 310
முனைவர். ஜோ. பென்னி

6. சிலப்பதிகாரம் சுட்டும் கண்ணகியின் இல்லறச்சிறப்பு 318
முனைவர் ஏ. ராணி

7. இரு நாவல்கள் - ஒரு நோக்கு 323
கு. பத்மநாபன்

8. தொ. மு. சி ரகுநாதனும் பஞ்சும் பசியும் நாவலும் 328
முனைவர். சஜலா

9. அயோத்தியா காண்டத்தில் மந்தரையின் சூழ்ச்சி 332
லா. லதிகா

மணிமேகலா தெய்வம் 337
முனைவர் தே. மெர்லின் மினி

சிலப்பதிகாரத்தில் தொன்மம் 343
முனைவர். செ. மெஜிலா ஜீவி

குலசேகராழ்வார் வாழ்வும் பணியும் 348
Dr. P. S. Ganesh Moorthy

நகுலன் நாவல்களில் பெண் கட்டமைப்பு 352
க. மாரியப்பன்

நாவல் உலகில் புனைவு வெளி 359
முனைவர். த. விஷ்ணுகுமாரன்

# மணிமேகலா தெய்வம்

முனைவர் தே.மெர்லின்மினி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

தமிழின் முதல் சமயக் காப்பியம் மணிமேகலை. பௌத்த சமய கோட்பாடுகளை எடுத்துரைக்கும் பேரிலக்கியம். இளமை, செல்வம், யாக்கை நிலையாமைகளையும் களவு, கொலை, காமத்தின் துயர்களையும் புத்த சமய கருத்துக்களையும் வலியுறுத்துகின்றது. இக்காப்பியத்தில் பௌத்த சமய இலட்சியங்கள் பரவலாகக் காணப்பட்டாலும் காப்பிய நாயகியான மணிமேகலையின் பெயரோடு தொடர்புப்பட்ட மணிமேகலா தெய்வம் தொடக்கம் முதல் இறுதி வரை காக்கும் கடவுளாக ஊடாடி வருவதை அறிந்து கொள்ள முடிகிறது.

## புத்தரும் பௌத்தமும்

கி.மு 6-ஆம் நூற்றாண்டில் சாக்கிய குலத்தில் கௌதம குடும்பத்தில் சுத்தோதனர் என்ற அரசனுக்கும் மாயாதேவிக்கும் மகனாக சித்தார்த்தர் பிறந்தார். மனித வாழ்க்கை துன்பங்களால் சூழப்பட்டது. அந்த துன்ப வாழ்விலிருந்து நீங்க நிலையான இன்ப வாழ்வை அடைய வேண்டும் என்ற எண்ணம் சித்தார்த்தருக்கு ஏற்பட்டது. அந்த நிலையான வாழ்வை பெறும் ஒரே வழி துறவு வாழ்வு என்பதை உணர்ந்து தன் இருபத்தொன்றாவது வயதில் மனைவி, குழந்தை, தாய், தந்தை என அனைத்து உறவுகளையும் விட்டு அரச பதவியையும் துறந்து காட்டிற்குச் சென்றார்.

துறவியாய் சென்ற சித்தார்த்தர் போதி (அரச) மரத்தின் அடியில் அமர்ந்து தியானம் செய்த போது மெய்ஞ்ஞான ஒளியைப் பெற்றார். மெய்ஞ்ஞான ஒளியைக் கண்ட சித்தார்த்தர் புத்தர் ஆனார். மனித வாழ்க்கையைப் பற்றிய நான்கு உண்மைகளை கூறினார்.

- ❖ இவ்வுலக வாழ்க்கை துன்பமும், வெறுமையும் நிறைந்ததாகும்.
- ❖ ஆசையே துன்பத்திற்கு மூலகாரணம்.
- ❖ நிறைவேறா ஆசையே மறுபிறவிக்குக் காரணமாகிறது.





ஆசையைத் துறந்தவர் நிர்வாணம் அல்லது பேரின்பம் எனப்படும் [பிற]வா நிலையை அடையலாம்.

[ம]னிதன் எச்செயலையும் பயனை அடிப்படையாகக் கொண்டு தான் [செ]ய்ய வேண்டும். தீவினை செய்த ஒருவன் அதிலிருந்து தப்பவே [மு]டியாது. எனவே நற்செயல்களை செய்தல் வேண்டும் என்ற புத்தரின் [கொ]ள்கைகளால் உருவாக்கப்பட்ட சமயமே பௌத்த சமயமாக [ம]லர்ந்தது.

## [ம]ணிமேகலை காப்பியமும் பௌத்தமும்

மதுரை கூலவாணிகன் சீத்தலை சாத்தனாரால் கி.பி 2-ஆம் [நூ]ற்றாண்டில் மணிமேகலை காப்பியம் இயற்றப்பட்டது. சிலப்பதிகார [க]தையின் முடிவு மணிமேகலையின் தொடக்கமாக அமைகிறது. இதனை

"மணிமே கலை மேலுரைப்பொருண் முற்றிய
சிலப்பதிகார முற்றும்" (சிலப்பதிகாரம், ப.441)

[எ]ன்னும் சிலப்பதிகார வஞ்சிக் காண்ட கட்டுரைச் செய்யுள் பகுதியினால் [அ]றியலாம்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவது தறிகென் றருளி"

(ஊரலருரைத்த காதை பா.64-67)

[...]ன பௌத்த சமயத்தின் நால்வகை வாய்மைகளையும். பஞ்சசீலத்தையும் [அ]றவணஅடிகள் எனக்கு உபதேசித்தார்கள். எனவே நான் இந்திர விழாவில் [நா]ட்டியம் ஆடுவதற்கு வரமாட்டேன். என் மகள் மணிமேகலையும் தவ [வ]ழி செல்லுவதற்கு உரியவளாவாள் என்று மாதவி கூறும் வரிகளிலிருந்து [பௌ]த்த சமயத்தின் உண்மையை பௌத்தசாரியாகிய அறவணவடிகள் [மூ]லமாக சாத்தனார் எடுத்துரைத்துள்ளார்.

"பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தென்"

(உதயகுமரன் அம்பலம் புக்ககாதை, பா.136-139).

இவ்வுடலானது துன்பம் நிறைந்த கொள்கலம் அதனை நீங்கி நல்லறம் புரிந்து வாழ்தலே சிறந்தது என்று மணிமேகலை கூறுவதும்,

"பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவை கென்னா நிமிராது"

(பாத்திரம் பெற்ற காதை, பா. 80 -81)

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே"

(பாத்திரம் பெற்ற காதை, பா. 95 - 96)

என்று உயிர்களுடைய பசித்துன்பத்தையும் அதனை தீர்ப்போருடைய பெருமையையும் தீவதிலகை மணிமேகலைக்குக் கூறுவதும் பௌத்த சமய கருத்துக்களைச் சாத்தனார் வலிமையாக எடுத்துரைப்பதற்கு சான்றாக அமைகிறது.

## மணிமேகலை பெயரிடுதல்

காவிரிப்பூம்பட்டினத்தில் செல்வத்தில் சிறந்த கோவலனுக்கும் அவன் காமக்கிழத்தியான மாதவிக்கும் பெண் மகவு பிறந்தது. கோவலன் தன் மகளுக்கு பெயரிடும் நாளன்று தன் முன்னோன் மரக்கலம் உடைந்து கடலில் தத்தளித்த போது

"இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன் அஞ்சல், மணிமே கலையான்
உன்பெருந் தானத்து உறுதி ஒழியாது
துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிக"

(அடைக்கலக்காதை, பா. 32 – 35)

என அத்துன்பத்திலிருந்து காப்பாற்றிய

"எங்குல தெய்வப் பெயர் ஈங்கு இடுக என
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமே கலை என வாழ்த்திய ஞான்று"

(அடைக்கலக்காதை, பா. 37 – 39)

என்று கோவலன் தன் குல தெய்வமாகிய மணிமேகலை என்னும் தெய்வத்தின் பெயரால் தன் மகளுக்கு பெயரிட்டான்.





## ...ல தெய்வம் மணிமேகலா

மணிமேகலை காப்பியத்தில் ஆணிவேராக பௌத்தசமய ...ருத்துக்கள் இருந்தாலும் கதையின் போக்கை வளர்த்திச் செல்வதற்கு ...காவலனின் குல தெய்வமாகக் கருதப்பட்ட மணிமேகலா தெய்வம் ...ணிமேகலைக்கு வந்த துயரங்களிலிருந்து அவளைக் காப்பாற்றுகிறது. ...லப்பதிகாரத்தில் அறிமுகம் செய்யப்படும் கடல்காவல் தெய்வமாகிய ...ணிமேகலா உவவனத்தில் மலர் கொய்ய செல்லும் மணிமேகலையை ...ன்தொடர்ந்த உதயகுமரனிடமிருந்து அவளைக் காப்பாற்றும் அற்புத ...சயலை செய்கிறது.

நாட்டுப்புற தெய்வ வழிபாடுகளுள் ஒன்றான சிறுதெய்வ ...ழிபாட்டினை போன்று இங்கு மணிமேகலா தெய்வமும் ...றியப்படுகின்றது. "நாட்டுப்புறத் தெய்வங்களைத் தான் சிறுதெய்வங்கள் ...ன அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ...ர் தெய்வவழிபாடும் இவற்றில் அடங்கும். வீட்டில் யாரேனும் ...ன்புற்றாலும் நோய்வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்திற்குப் பூஜை ...சய்வர். குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைகட்கு வைப்பர்."

(நாட்டுப்புறஇயல் ஆய்வு, சு.சக்திவேல், ப. 225)

...ன்ற கூற்றிலிருந்து தன் குல தெய்வ பெயரை கோவலன் தன் ...களுக்குச் சூட்டியதும், அவளை அத்தெய்வம் துன்பங்களிலிருந்து ...ப்பாற்றியது என்பதாலும் பௌத்தர்கள் குலதெய்வ வணக்கத்தினை ...காண்டிருந்தனர் என்பது தெரிகின்றது.

"பௌத்த தர்மத்தைப் பின்பற்றியொழுகும் நல்லோர்க்கும், ...ற்றோர், ஆசிரியர் முதலியவரை வழிபட்டொழுகும் சீரியோர்க்கும் ...தேனும் இடையூறு நேரிடுமாயின், அவற்றினின்று அனைவரைக் ...ப்பாற்றவும் இவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இவ்வாறு கடமை ...றுக் கொண்ட இவர்கள் மண்ணுலகில் ஆங்காங்கே சிறு தெய்வங்களை ...ருக்கச் செய்து, நல்லோருக்கு நேரிடும் துன்பத்தைத் தீர்க்கும் படி ...ச்சிறு தெய்வங்களுக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு இருத்தப்பட்ட ...தய்வங்களில் மணிமேகலையும் ஒன்று. கடலில் கப்பலில் யாத்திரை ...சய்யும் நல்லோருக்கு இடுக்கண் நேரிடுமாயின் அன்னவரின் துயர் ...த்து உதவி செய்வது மணிமேகலைத் தெய்வத்தின் பொறுப்பு வாய்ந்த ...மையாகும்"

(பௌத்த...ம் தமிழும், மயிலை சீனி. வேங்கடசாமி ப. 170)

இதன்படியே கோவலனின் முன்னோன் நல்லோனாக இருந்த காரணத்தினால் நடுக்கடலில் தத்தளித்த போது மணிமேகலா தெய்வம் காப்பாற்றியது.

### மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும்

மணிமேகலை மலர் பறிப்பதற்காக தன் தோழி சுதமதியுடன் உவவனம் சென்றாள். அங்கு அவளை பின்தொடர்ந்து சென்ற உதயகுமரனிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு பளிக்கறை மண்டபத்தினுள் செல்கின்றாள். அங்கு மணிமேகலா தெய்வம் தோன்றி சுதமதியிடம் சக்கரவாளக் கோட்டம் வழியாகத் தப்பிச் செல்ல வழி கூறுகின்றது. பின்னர் உவவனத்தில் தூங்கி சுதமதியை எழுப்பி

"இந்திர கோடணை யிநற்நகர்க் காண
வந்தே னஞ்சன் மணிமே கலையான்"

(துயலெழுப்பிய காதை, பா.17 – 18)

என்று கூறிய மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவம் என்னும் தீவில் கொண்டு சென்றது. அங்கு புத்த பீடிகையைக் கண்டு தன் பழம் பிறப்பை அறிகின்றாள் மணிமேகலை. புத்த பீடிகையில் அட்சய பாத்திரத்தைப் பெற்று பசிப்பிணியைப் போக்கினாள். இக்காப்பியத்தின் இறுதி பகுதியில் காவிரிபூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் நடைபெற்று வந்த இந்திர விழாவை ஓர் ஆண்டு சோழ மன்னன் நடைபெறாமல் நிறுத்திய காரணத்திற்காக மணிமேகலா தெய்வம் கோபம் கொண்டு சபிக்க அவ்வூர் வெள்ளத்தினால் அழிந்தது என்று நூலினால் அறியப்படுகிறது.

"அறமெனப்படுவ தியாதென கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியு முடையுமுறையுளு மல்லது
கண்ட தில்லெனக் காவலனுடைக்கும்"

(ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை, பா. 298 – 331)

என்னும் வரிகளுக்கேற்ப தானஞ்செய்தலை மேற்கொண்டு வாழ்ந்தாள் மணிமேகலை. மணிமேகலா தெய்வத்தின் உதவியால் தன் பழம் பிறப்பின் உணர்ச்சியையடைந்த மணிமேகலை அதன் பின்,





புத்தம் சரணங்கச்சாமி
தர்மம் சரணங்கச்சாமி
சங்கம் சரணங்கச்சாமி

ன்பவற்றை மூன்று முறை சொல்லி மும்மணிகளையும் மூன்று முறை ணங்கி அறவணடிகளைச் சரணாகதியாக அடைந்தாள்.

### யன்பட்ட நூல்கள்

மணிமேகலை, டாக்டர் உ.வே.சா நூல்நிலையம்.
சிலப்பதிகாரம், புலியூர்க்கேசிகன் தெளிவுரை.
நாட்டுப்புற இயல் ஆய்வு, டாக்டர் சு.சக்திவேல்
பௌத்தமும் தமிழும், மயிலை சீனி. வேங்கடசாமி.